தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 2 | தி.பி. 2015 சுறவம்-8 (22-1-1984) விலை 0·65 காசு இதழ் எண் : 31 பகுதி 4-5

இந்தியாவின் அசாம், பஞ்சாப் சிக்கல்களைத் தீர்க்கத் தெரியாத இந்திராகாந்தி, இலங்கைச் சிக்கலைத் தீர்ப்பார் என்று நம்புவது அறியாமை!

வெறும் பேச்சுகளால் இலங்கைத் தமிழர் சிக்கல் என்றுமே தீராது!

நிலப்பகிர்வால் மட்டுமே அது முடிவுக்கு வரும்!

ஏற்கனவே எழுதப்பட்ட நாடகத்தை நன்றாக நடித்துக்காட்டுகின்றது கூட்டணி!

தமிழீழ மக்களை மட்டுமன்று, தம் கூட்டணித் தோழர்களையும் திறமையாக ஏமாற்றுகிறார், அமிர்தலிங்கம்!

ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்கிறார் சந்திரகாசன்!

போராட்ட அணிகள் வேறு யார் தலையீடுமின்றி, ஒன்று சேர்வதே தமிழீழத்தை மீட்டெடுக்கும்! பாவலரேறு எச்சரிக்கை!

இந்திராகாந்தி ஆட்சிக்கு வந்த பின்னும் முன்னும் இந்தியாவில் எழுந்த பல சிக்கல்கள் இன்னும் தீர்க்கப்படாமலே இருக்கின்றன. அவற்றுள் தலையாய, தலைபோகிற சிக்கல்களாக இன்றைக்கும் இருப்பவை அசாம் சிக்கலும், பஞ்சாப் சிக்கலும். இவற்றுடன் ஏற்கனவே உள்ள காசுமீர் சிக்கலும், நாகாலாந்து சிக்கலும் என்றைக்குமே முடிவுக்கு வராத சிக்கல்களாக நின்று நிலைத்து வருகின்றன. ஆனால், உடனடியாகத் தீர்க்கப்படவேண்டியனவாக உள்ள அசாம், பஞ்சாப் சிக்கல்களைத் தீர்க்கத் தெரியாத இந்திராகாந்தி, இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டுவரும் தமிழீழச் சிக்கலைத் தீர்த்து வைத்து விடுவார் என்று நம்பிக்கொண்டிருப்பது ஒரு பெரிய அறியாமையாகும்; முட்டாள்தனமுமாகும். 'குப்பையேறிக் கோழி பிடிக்கத் தெரியாத குப்பன், வானம் ஏறி வைகுந்தம் காட்டப் போகிறானாம்' — என்று ஒரு பழமொழி உண்டு. அது போன்றதுதான் இந்தக் கதையும். மேலும், ஒரு வகையில் இந்திராகாந்தி முயற்சியால், செயவர்த்தனேவுக்கும், தமிழீழ முன்னணிக்கும் ஓர் ஒப்பந்தமோ, உடன்பாடோ ஏற்பட்டாலும், அது தமிழீழச் சிக்கலைத் தீர்த்து விடும் இறுதி நடவடிக்கையாக இருந்துவிட முடியாது. இந்த வகையில் ஒரு நிலையான தீர்வு ஏற்படவேண்டுமானால், அது தமிழீழ விடுதலையாகத்தான் இருக்க முடியும் என்பதே அங்குள்ள தமிழ் மக்களின், குறிப்பாகப் போராட்ட இளைஞர்களின் உள்ளார்ந்த கோரிக்கையாகும். எனவே வெறும் பேச்சுகளால் இலங்கைத் தமிழர் சிக்கல் என்றுமே தீராது. தமிழீழ நிலப்பிரிவினையால் மட்டுமே அச்சிக்கல் ஒரு முடிவுக்கு வரமுடியும் என்பதை அனைவரும் திட்டவட்டமாக உணர்ந்துகொள்க!

இந்நிலையில் இந்திராவின் தூதுவர் பார்த்தசாரதியின் ஈடுபாடு என்பது வெறும் ஒரு கண் துடைப்பே! மக்களுக்கு இவ்வகையில் ஏதோ ஒரு முயற்சி நடைபெறுகிறது என்று காட்டுவதற்கும், அவர்களை அமைதிப்படுத்துவதற்குமே இது நடத்தப்படுகிறது. அமிர்தலிங்கம்—செயவர்த்தனே--ஆடும் நாடகமோ ஏற்கனவே திட்டமிடப்பட்டது! அதில் தங்கள் இருவருமே நடித்தால், மக்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் இன்னும் சொன்னால் — உலக நாடுகளில் உள்ள தமிழர்கள், நிறைவடையமாட்டார்கள் என்பதற்காகவே இதில் இந்திராவையும் அவர் வழியாகப் பார்த்தசாரதியையும் துணைநடிகர்களாக ஈடுபடச் செய்துள்ளனர். இந்த உண்மை பெரும்பாலருக்குத் தெரியாது: ஏன் கூட்டணியின் பிற உறுப்பினர்களுக்கே சரியாக விளங்காது. மேலும், அவர்கள் அச்சத்தால் நாடி தளர்ந்து போயிருக்கின்றனர். அமிர்தலிங்கம் என்ன செய்தாலும் அதை ஆதரித்துத்தீர்வது என்னும் முடிவுக்கே அவர்கள் வந்து விட்டார்கள். தமிழீழ மக்களைப் பற்றிக் கூட்டணியினர் எவருக்கும் கவலையிருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறிருந்தால், அங்குள்ள இக்கட்டான நிலையில், தங்களை நம்பியுள்ள தமிழ் மக்களை ஆதரவற்ற நிலையில், விட்டுவிட்டுத் தம் தம் பெண்டு பிள்ளைகளைமட்டும் அழைத்துக் கொண்டு இங்கு வந்திருக்க மாட்டார்கள்! கடந்த சூலை மாத அதிர்ச்சியிலும் அச்சத்திலும் அவலத்திலும் தமிழீழ மக்கள் இன்னும் விடுபடாத நிலையில், இவர்கள் இங்கு அரசு விருந்தும் ஆடம்பர செலவுகளுமாய்நாள் கடத்தி வருவது கொடுமையிலும் கொடுமையானதாகும்! இந்த வகையில், தமிழீழ மக்களை மட்டுமன்று, தம் கூட்டணித் தோழர்களையும், திறமையாக நம்பவைக்கிறார் திரு. அமிர்தலிங்கம்.

இவற்றுக் கிடையில் இன்னொரு சூழ்ச்சியும் திட்டமிட்டு நடந்து வருவதாகத் தெரிகிறது. தமிழீழப் பெரியார் தந்தை செல்வா அவர்களின் மகனும், தமிழர் முன்னணியின் வழக்குரைஞருமாகிய திரு. சந்திரகாசன், திரு. அமிர்தலிங்கத்திற்கு எதிராக நடப்பதாக எண்ணிக்கொண்டு, தமிழீழ விடுதலைப் போராளிகளுக் கிடையில் ஏற்கனவே உள்ள பிளவை அகலப்படுத்தி, அவர்களில் ஒரு பகுதியினரைத் தம் சார்பாக இயங்கச் செய்ய முயன்று வருவதாக அறிகிறோம். செய்திகள் உண்மையானால், மிகவும் வருந்துகிறோம்.

போராட்ட இளைஞர்கள் ஒன்றுபட்டால்தான் அரசியல்காரர்களின் கவட நாடக நிகழ்ச்சிகளையும், பகைவர்களின் கொட்டங்களையும் ஒடுக்க இயலும். எனவே, சந்திரகாசன் போன்றவர்கள், தமிழீழத்தின் பெயரால் வெளிநாடுகளில் திரட்டும் பணங்களை இளைஞர்களைப் பிளவுபடுத்தி, ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்கும் முயற்சிகளில் ஈடுபடுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம். மற்றபடி, போராட்ட அணிகள் வேறு யார் தலையீடும் இன்றி, தங்களுக்குள் ஒன்று சேர்வதே, தமிழீழத்தை விரைவாக மீட்டெடுக்கும் உண்மை வழி- உறுதியான வழி என்று அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

—பெருஞ்சித்திரனார்

மொழி, இனம், நாடு, அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

தொடர்ச்சி-5

நாள்வரிசைச் செயல் விளக்கம் :

பாவலரேறுவின் முதல் ஐரோப்பியச் சுற்றுச்செலவு

எண்	நாள்	நேரம்	செயல்விளக்கம்
151)	11-10-83	பகல் 3	அரிமா வீட்டில் அரிமாவின் திருமண நாள் - ஆபிரகாம் லிலி திருமண முதலாண்டு நிறைவு நிகழ்ச்சியும் விருந்தும்.
152)	,,	இரவு 8 இரவு 3 வரை	செயலர் சம்பத்து வீட்டில் வழியனுப்புவிழா. விருந்து,பரி சளிப்பு,படப்பிடிப்புமுதலியன.

தில்லி வழித் தமிழகம் திரும்புதல்.

எண்	நாள்	நேரம்	செயல்விளக்கம்
153)	12-10-83	காலை 8	தமிழகம் புறப்பாடு. அரிமா வீட்டில் எல்லாரிடமும் விடை பெறல். அரிமா குடும்பம், சம்பத் வானூர்தி நிலையம் வந்து வழியனுப்புதல்
154)	,,	காலை 8.45	வானூர்திவழி தில்லிபுறப்பாடு.
155)	13-10-83	காலை 3.30	தில்லி அடைதல்.
156)	,,	காலை 6.30	- சென்னை செல்ல வானூர்தி புறப்படல்
157)	,,	காலை 10.30	சென்னை வானூர்தி நிலையம் வரல் குடும்பம், அன்பர்கள் வரவேற்பு.

முடிவுற்றது

தமிழீழ நாள்காட்டிகள் வரப்பெற்றோம்!

1. தமிழீழ மக்கள் விடுதலைக் கழக நாள்காட்டி.

1984 ஆம் ஆண்டு நாள்காட்டி ஒன்றை, உமாமகேசுவரன் தலைமையில் இயங்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வெளியிட்டுள்ளது,

அழகிய ஐந்து வண்ணங்களில் பட அச்சு முறையில் மிகவும் சிறப்பாக நாள்காட்டி விளங்குகிறது. ஒவ்வொரு மாதத் தாளிலும் கருத்துகள் பொதிந்த அழகிய ஐந்து வண்ணப் படங்கள் பன்னிரண்டு மாதப் படங்களும் பல்வேறு பன்னிரண்டு தமிழீழப் போராட்ட நிகழசிகளையும், தலைவர்கள், மறைந்த போராட்ட வீரர்களையும் நினைவூட்டுகின்றன. நடைமுறை மாத எண்களுடன் முன்மாதப், பின்மாத எண்களும் தரப் பெற்றுள்ளன. முகாமையான உலக அறிஞர்கள், தமிழ்த்தலைவர்கள் பிறந்த நாள், நினைவு நாள் குறிப்புகள், முகாமையான நிகழ்ச்சிக் குறிப்புகள், பொன் மொழிகள் ஒவ்வொரு மாதத் தாளிலும் தரபபட்டுள்ளன. மாதப் பெயர்களும். கிழமைப் பெயர்களும் கருத்துகளும் தூய தமிழில் விளங்குகின்றன. பளபளப்புடன் கூடியபட அச்சு அமைப்பு கண்ணைப் பறிக்கின்றது! நிறைய பொருட் செலவுடன் வெளியிடப் பெற்று, அடக்க விலையுடன் சிறிதே கூடுதல்வைத்து விற்கப் படுகின்றது.

நாள் காட்டி ஒன்றின் விலை 6 உருபா. அஞ்சல் செலவு தனி. 10 நாள்காட்டிகளும் அதற்கு மேலும் தருவிப்பவர்களுக்குத் தக்க கழிவுடன், அஞ்சல் செலவும் ஏற்றுக் கொள்ளப்படும்!

கிடைக்குமிடம்: ரே/பா. தென்மொழி, சென்னை-5

2. தமிழ் ஈழ நாள்காட்டி.

பிரான்சில உள்ள தமிழீழ விடுதலைப் பேரவை வெளியிட்டுள்ள அழகிய இருவண்ண நாளகாட்டி வரப்பெற்றோம். வழவழப்பான தடித்த வெள்ளை அட்டையில் இருவண்ணங்களில் பெரியஅளவான தமிழீழ வரை படத்துடன், பன்னிரண்டு மாதங்களும் ஒருசேர அச்சிடப் பெற்றுள்ள சிறந்த வெளியீடு. தமிழீழத்தின் வரலாற்றுக் குறிப்புகள் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன. விலை குறிக்கப் பெறவில்லை. விற்பனைக்குக் கிடைக்குமா என்று தெரியவில்லை.

பிரான்சு உ,த.மு.க. அமைப்பாளரின் பொங்கல் வாழ்த்து!

சிலை: கூ. திபி உ0கச (18-12-83)

போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரிய
எங்கள் ஐயா அவர்களுக்கு
வணக்கம். நலமே சூழ்க.

பழிப்பார் புல்லுரை தீய்ந்தழியவும், எதிர்ப்பார் அறிவின்மை மாய்ந் தொழியவும், தமிழின மேம்பாட்டுக்கு ஊற்றுக் கண்கள் உலகெங்கணும் உ.த.மு.க. வடிவம் திறக்கப் பெற்று, நிலை கொள்ளவும், தங்களின் பெருந்துணையும் வினைத்திட்டமும் இறையருளால் தொடர்ந்து கிட்டும் வண்ணம், வரும் புத்தாண்டு பொங்கல் திருவிழாக்கள் அமைந்து, தமிழினத்தைத் தூக்கி நிறுத்த வேண்டும் என உழுவலன்புடன் விழைகின்றோம்.

அன்பு மாணுக்கன்.
—த. அரிமா வளங்கோ, தலைவர் உ.த.மு க. பிரான்சு.

தொடர்-5

ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

என் முதல் ஐரோப்பியச் சுற்றுச் செலவு

தம்பி, திரு. அரிமாவளங்கோ தம் ஊக்கத்தாலும் உழைப்பாலும் விடா முயற்சியாலும் ஓரளவு நன்கு வளர்ந்து வளம் பெற்றிருந்தார். குடும்ப முன்னேற்றம் எந்த அளவுக்கு அவர் உள்ளத்தில் கால் கொண்டிருக்கிறதோ, அந்த அளவுக்குத் தமிழ் முன்னேற்றமும், தமிழின முன்னேற்றமும் அவர் உள்ளத்தில் எப்பொழுதுமே கிளர்ச்சியுற்றிருந்தன. தூங்கும் நேரம் தவிர, மற்ற முழு நேரங்களில் எல்லாம், தமிழும், தமிழன நலமுமே அவர் பேச்சாக, மூச்சாக நின்று இலங்குகின்றன.

குடும்ப நிலையில், அவர் தந்தை, தமையனார் குடும்பம்' தமக்கைகள், தமக்கையர் பிள்ளைகள், தமக்குற்ற நண்பர்கள் சிலர் ஆகிய அனைவரையுமே புதுச்சேரியினின்று பிரான்சுக்குக் குடியேற்றி, அவர்களுக்கெல்லாம் ஏற்ற பணிகளைத் தேடித் தந்து, பிரான்சுக் குடிமக்களாக்கி அவர்களின் அனைத்து முன்னேற்ற நிலைகளுக்கும் தாம் ஒருவரே முழுப் பொறுப்பாக நின்று விளங்குகிறார்; திருக்குறளின் 'சுற்றந் தழால்' அதிகாரத்திற்கே இலக்கியமாக விளங்கும் அப் பெருமகனின், அனைத்து நிலைகளும் எனக்குப் பெருமகிழ்வை ஊட்டியன. இனி, இவ்வனைத்துக்கும் மேலாக, அவர் தூய தமிழ்மேல் கொண்ட பற்றும், தமிழினத்தின் மேல் கொண்ட பாசமும், அக்கறையும், ஆர்வமும் என்னை வியப்பும் திகைப்பும் அடையச் செய்தன. அவரை வாயாரப் பாராட்டினேன்; மனங்குளிரப் புகழ்ந்தேன். அப்படிப்பட்ட ஓர் உண்மை உணர்வினரை என் தலைமாணுக்கருள் சிறந்த ஒருவராகப் பெற்ற பெருமைக்கு, இறைமையை வணங்கி வாழ்த்தினேன்.

உலகெங்கும் உள்ள ஆயிரக்கணக்கான தென்மொழி மெய்யன்பர்களில், உள்ள நெருக்கமும், உயிர்த்தொடர்பும் உற்ற என் அன்புக்குகந்த மாணவர்கள் மிகச் சிலரே! அவருள்ளும் ஒரு பத்துப் பன்னிருவரே, என்னை அன்றும் இன்றும் என்றும் பேணிப் புரந்து காத்து வரும் பெருந்தகைமை உடையவர்கள். அவருள்ளும் ஒரு பகுதிப் பேர்களே எனக்குத் துளியும் வேறு நினையாமல், மாறு நடவாமல் என் முழு நலத்திற்கும், முழுக் கொள்கை நிறைவேற்றத்திற்கும் பெருந் துணையாகி நிற்கும் பெற்றியாளர்கள். அவர்களுள் ஒருவரே தம்பி திரு அரிமா வளங்கோ. 'தனராசு' என்னும் பெயரை இருபதாண்டுகளுக்கு முன்னரே வளங்கோ என்று மாற்றிக் கொண்டு, அதற்கு முன்னர் அரிமா என்று அடைமொழியும் சேர்த்துத் தம் ஒன்றிய உள்ள உணர்வினர் ஒரிருவர்க்கும் அதே வகையில் 'அரிமா' என்னும் அடை சேர்த்து வழங்கி வந்துள்ளார். எனவே அவரின் வளர்ச்சி எனக்கு முழு மகிழ்ச்சியையும் முழு உள்ள நிறைவையும் அளித்தது. அவரின் வளர்ச்சியைத் தமிழ் வளர்ச்சியாகக் கருதினேன்; தமிழின முன்னேற்றமாக எண்ணினேன்:

அவர் எனக்கென வீட்டு மேல்மாடியில் ஓர் அறையினை ஒதுக்கியிருந்தார்- அதில் நூற் பேழைகள் இருந்தன தேவையான பிறபுழக்கப் பொருள்கள் இருந்தன. சிறிய ஒரு தொலைக் காட்சிப் பெட்டியும், தொலைபேசியும். இருந்தன: அவர் உள்ளம் போல் அவர் ஒதுக்கித் தந்த அந்த அறையும் ஒளி பெற்றிருந்தது. அதில்தான் என் பிரான்சுத் தங்கலின் முழு நாட்களையும் கழித்தேன். 12-9-83 மாலை பிரான்சில் காலடி வைத்தது முதல், 12-10-83 காலை அங்கிருந்து தமிழகம் புறப்பட்டதுவரை அந்த அறை என் தமிழுணர்விற்கும், இன நல மேம்பாட்டுச் சிந்தனைகளுக்கும் உறைவிடமாகிப் பெருமை பெற்றது.

அனைவரையும் கண்டு களித்துப் பேசி முடித்தபின் சிறிது நேரம் தம்பி வளங்கோவுடன் தனிமையில் உரையாடினேன். பிரான்சில் உள்ள தமிழர் நிலை அண்டை அயல் ஐரோப்பிய நாடுகளில் உள்ள தமிழர்கள் நிலை, தமிழின மேம்பாட்டுக்காக அங்கெல்லாம் உழைத்துக் கொண்டிருப்பவர்களின் முயற்சிகள், நாம் இனி, மேற்கொள்ள வேண்டிய தமிழ், தமிழின முன்னேற்ற முயற்சிகள், அந்நாடுகளில் உள்ள போலித் தமிழ்த் தொண்டர்கள், அவர்களின் ஆரவார இயக்கங்கள், பிரான்சில் ஏற்பாடு செய்யப்பெற்றுள்ள நம் நிகழ்ச்சிகள், முதலிய அனைத்துச் செய்திகளையும் சுருக்க விளக்கமாக எனக்கு அவர் தெரிவித்துக் கொண்டிருந்தார்.

இரவு 6-30 மணியளவில், அரிமாவளங்கோ வீட்டின் கீழ் உள்ள வரவேற்பு அறையில் உ.த.மு.க. செயற்குழு உறுப்பினர்களும், பிரான்சு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரும் ஏறத்தாழ முப்பது பேர்கள் கூடியிருந்தனர். அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, நம் கருத்துகளை எடுத்து விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் வளங்கோ. கூட்டம் விரிவாக நடந்தது. வந்திருந்த அன்பர்கள் தமிழின நலம் பற்றியும், நம் எதிர்காலக் கொள்கைச் செயற்பாடுகள் பற்றியும், தமிழீழச் சிக்கல்கள் பற்றியும் விரிவான விளக்கங்களைக் கேட்டனர். இரவு 9-30 மணிவரை அவர்களுக்குப் பலவாறான விளக்கங்களையும் அளித்தேன். அதன் பின் வளங்கோவால் வந்திருந்த அனைவர்க்கும் இரவு விருந்து அளிக்கப்பட்டது. விருந்துக்குப் பின்னரும் 11-30 மணி வரை பேச்சு நீடித்தது.

அனைவரும் விடைபெற்றுச் சென்ற பின்னர், மாடியில் நான் தங்கியிருந்த அறைக்கு நானும் வளங்கோவும் சென்றோம். இரவு 1 மணிவரையில் வளங்கோ தமிழ்நாட்டின் அரசியல் நிலைகள், தமிழின முன்னேற்ற முயற்சிகள், தென்மொழி, தமிழ்நிலம், அச்சகம் பற்றிய வலிவு மெலிவு நிலைகள் அன்பர்களின் ஒத்துழைப்பும் ஒத்துழையாமையும் அவர்களின் எதிர்நிலை முயற்சிகள், நம் குடும்பச் செய்திகள் முதலிய பலவற்றைப் பற்றியும் விளக்கமாகக் கேட்டுத்தெரிந்து கொண்டார்.

ஐரோப்பிய நாடுகளில் குளிர் மிகுதி. நான் சென்றிருந்த செப்டம்பர் மாதந்தான் குளிர் தொடக்கம். ஏனவே கம்பளிச் சட்டையில்லாமல் அறைக்குள்ளும் இருத்தல் இயலாது. வீட்டின் அனைத்துக் கதவுகளும் பலகணிகளும் எப்பொழுதும் மூடப்பட்டே இருத்தல் வேண்டும். எனக்கும் கம்பளிப்போர்வை முதலியவற்றைக் கொடுத்திருந்தார் வளங்கோ

(தொடரும்)

தென்னார்க்காடு (தெற்கு) மாவட்ட உ.த.மு.க.வின் வெற்றிச் செயற்பாடுகள்!

தென்னார்க்காடு (தெற்கு) மாவட்ட உ த மு க. சார்பில பொதுமக்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகள் அரசுக்கு எடுத்துக் கூறப்பட்டுச் சில ஆக்கமான செயற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அவற்றுள் முதல் கட்டமாகத் திட்டக்குடி வட்டம் இறையூர் என்னும் சிற்றூருக்குக் குடிநீர் வேண்டி, கடந்த 21-5-83-இல் தெ ஆ மாவட்ட ஆட்சித் தலைவர்க்கு. அங்குள்ள உ.த.மு.க. சார்பாகப் பொது மக்களிடத்தில் கையெழுத்துகள் வாங்கி ஒரு வேண்டுகோள் விடுக்கப் பெற்றது.

அவ்வேண்டுகோளுக்கு இணங்க இறையூரில் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப் பெற்றுக் குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பெற்றன. பொதுமக்களின் அடிப்படைத்தேவைகளை, இவ்வகையில் நிறைவேற்றி வைத்த மாவட்ட ஆட்சித்தலைவர்க்கு நன்றியறிதலும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், கடந்த பல ஆண்டுகளாகக் கள்ளக்குறிச்சி வட்டம், சங்கராபுரம் என்னும் ஊரில் பேருந்து நிலையத்தின் தென்புறம் உள்ள பாவேந்தர் நகரில் வாழும் குடிமக்களுக்குப் பொதுநடைவழி இல்லாமலும் குடிநீர் இல்லாமலும், மிக மிக இன்னலுற்று வருகின்றனர். மேற்கண்ட மக்களுக்குப் பொதுநடைவழி அமைக்கவும், குடிநீர் கிடைக்கவும், தக்க நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டும், சங்கராபுரம் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யுமாறும், ஒரு வேண்டுகோளைப் பொதுமக்கள் கையெழுத்துகளுடன், தெ. ஆ. மாவட்ட ஆட்சித்தலைவர்க்கு கடந்த 26-12-83-இல் தலைமைக்கழகத்தின் பரிந்துரையோடு அம் மாவட்ட உ.த மு க. பொருளர் புலவர் திரு. இரா. தமிழ்வேந்தன் எழில் அனுப்பி வைத்துள்ளார்.

இந்த வேண்டுகோளையும் தெ. ஆ. மாவட்ட ஆட்சித் தலைவர் விரைவாகக் கவனித்துத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது —என்னும் செய்தியை திரு. இரா. தமிழ்வேந்தன் எழில் தெரிவிக்கிறார்.

மாந்தரின் இனத்துளே முதலவன் நீதான்!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்
உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு
சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 31 (22-1-84) பகுதி 4-5

‘தமிழியக்க’த்தை மறைப்பதற்குப் பாரதிதாசனையே மறைத்துவிடலாமே!

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தினர், தெரிந்தோ, தெரியாமலோ, கலைஇளவர்(B.A.) பாடத்திட்டத்தில், பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய ‘தமிழியக்கம்’ எனும் பாட்டு நூலைப் பாடமாகச் சேர்த்திருந்தனர். ஆனால் அதில் பார்ப்பன இனத்தினரைக் குறைத்து மதிப்பிடும் கருத்துகள் இருப்பதால், அவர்களுள் சிலர் எதிர்ப்புக் காட்டியுள்ளனர். அதைக் கண்டு அஞ்சி அந்நூலை நீக்கிவிட்டுப் பாவேந்தரின் ‘அழகின் சிரிப்பு’ நூலை மீண்டும் வைத்துள்ளனர். இது மாணவர்களிடையேயும், பொதுமக்களிடையேயும் மனக்கொதிப்பை உண்டாக்கியிருக்கிறது.

நம் தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலனவை, மதச்சார்புடையவையும், இன, குலச்சார்புடையவையாகவுமே உள்ளன. சிலவற்றுள் ஆரிய இனத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ உயர்த்திக் கூறும் பகுதிகளும் இருக்கவே செய்கின்றன. இலக்கியங்கள் ஒருவகை வரலாறுகளே ஆகையால், நாம் அவற்றைத் தள்ளிவிடாமல், ஏற்றுக்கொண்டே வருகிறோம். நமக்குள்ள இலக்கியங்களுள் சிறந்த ஒன்றான கம்பராமாயணமே ஆரிய ஏற்றத்தைக் கதை வடிவாகக் கூறும் இலக்கியந்தானே! ஆனால், இலக்கியச் சிறப்புக் கருதி அதை நாம் தொடர்ந்து பாடமாகப் படித்து வருகிறோமே! திருவிளையாடல் புராணத்தைக் கிறித்துவர்கள், முகலீம்கள் படிக்காமலா விட்டு விட்டார்கள்?

எனவே, மக்களில் ஒரு பகுதியினர் எதிர்க்கிறார்கள் என்பதற்காகத் தமிழியக்கம் இலக்கியத்தரம் இல்லாமற் போய்விடுமா? பாவேந்தர் இலக்கியங்களிலேயே தலைசிறந்தவை, அழகின் சிரிப்பு, தமிழியக்கம், குடும்பவிளக்கு ஆகிய மூன்று படைப்புகளுந்தாம்! அவற்றுள் ஒன்றான ‘தமிழியக்கம்’, நாட்டு நிலைகளை அப்பட்டமாகக் கூறித், தமிழ் மக்கள் தமிழ்மொழியின் சீரழிவை இன்னின்ன துறைகளில் மீட்டெடுக்க வேண்டும் என்ற வகையில் எழுந்த, அருமையும் அழகும் கருத்துச் செறிவும் மிக்கதான ஒரு நூல். இதில் பார்ப்பனர்களின் செயல்கள் சில இடங்களில் வருவது, இயல்பானது; இன்றும் உள்ள நிலையை உணர்த்துவது. இதைக் காரணம் காட்டி அந்த நூலை ஏன் மாணவர்கள் படிக்காமல் தடுக்க வேண்டும்? பார்ப்பனர்களின் வாழ்வியல், வழக்கியல் முதலியவற்றையெல்லாம் கொண்ட கதைகள், பாடல்கள் பாடத்திட்டங்களில் இல்லையா? இப்படிப் பார்த்தால், பல எதிரடிச் செயல்கள் தமிழகக் கல்வி வளாகங்களில் நிகழவிருப்பதைத் தடுக்கவியலாமல் போய்விடக் கூடும். அவற்றைப் பல்கலைக் கழகத்தினரும், அரசினரும் விரும்புகின்றனரா? பார்ப்பனர், குமுகாய நிலையில் தங்களுக்கு ஓர் ஏற்றத்தையும், பெருமையையும் நிலைப்படுத்திக் கொண்டிருக்கும் வரை, இத்தகைய போராட்டங்களும், போராட்ட முயற்சிகளும் ஏதோ ஒரு வகையில் நடந்து கொண்டுதாம் இருக்கும். எனவே, அவ்வினைச் சிறுபகுதியினர், முகஞ்சுளிக்கிறார்கள் அல்லது முணுமுணுக்கிறார்கள் அல்லது எதிர்க்கிறார்கள் என்பதற்காக, ஓர் இலக்கியத்தை ஏன் இருட்டடிப்புச் செய்ய வேண்டும்?

மேலும், பாரதிதாசன் பெயரால் அமைந்த பல்கலைக்கழகமே, அவர் இலக்கியத்தைப் பாடமாக வைக்கப் பின் வாங்குகிறது என்றால், பாரதி போன்ற வேறு பெயர்களால் அமைந்த பல்கலைக் கழகம், எப்படி அதற்கு முன் வரும்? நாளைக்குப் பாரதிதாசன், பார்ப்பன இனத்தைக் கண்டித்துள்ளார் என்பதனால், அவர் பெயரில் பல்கலைக் கழகமே இருத்தல் கூடாது என்று கருத்தெழுமானால், உடனே அவர்கள் அப் பெயரை மாற்றவும் துணிவார்கள் என்றுதானே பொருள்படுகின்றபடி பல்கலைக்கழகம் நடந்து கொள்கிறது. இந்நடைமுறை எப்படிச் சரியானது ஆகும்? செயலலிதா என்னும் நடிகையைப்பற்றி, அப்பல்கலைக்கழகத் தேர்வில் கேள்வி தந்த அறியாமை உடைய ஆசிரியர்களும் ஆளுமையர்களும் அங்கு இருப்பது, நம் நாட்டுக் கல்வித்துறைக்கே இழுக்கானது. மனம் போனபடி செயல்படும் அப்பல்கலைக் கழக ஆளுமையர்கள் நன்கு எண்ணிப் பார்த்து—மறுஆய்வு செய்து-மீண்டும் தமிழியக்கத்தைப் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்! இல்லெனில் இப்பொழுது எழுந்துள்ள தீப்பொறி பெருநெருப்பாகிப் பற்பல சிக்கல்களைத் தோற்றுவித்து விடலாம்! பல்கலைக் கழகம் கவனிக்கவேண்டுகிறோம்! 0

சென்ற இதழ்த் தொடர்ச்சி :

இனம் ஒன்றுபட வேண்டும் என்பது எதற்கு?-5

இனி, இறுதியாக நாம் கூற வந்த கருத்துக்கு வருவோம். ‘தமிழினம் தாழப் போகிறது; அதற்கான அறிகுறிகள் தோன்றி விட்டன. எப்படியேனும் இவ்வினத்தின் மூலத் தன்மைகளையும், முழுப்பண்பாட்டியல்களையும் காப்பாற்றியாக வேண்டும்; அல்லது நிலைப் படுத்தியாக வேண்டும்' என்று உறுதிபூண்டார் திருவள்ளுவப் பேராசான், இனநலக் காப்பாளர், எதிரதாக் காக்கும் இனஅறிவாளர்.

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய் (429)

— என்னும் முன்னறிவிப்பும் முன்னெச்சரிக்கையும் கொண்ட பேரறிவாளர் அவர். எனவே ‘தமிழ்க்குடி’யின் நலங் கெடப் போகும் தாக்கத்தை முன்னதாகவே உய்த்துணர்ந்து, உற்றறிந்து, அதன் முந்தயவாம் பண்பு நலன்களையும், அறிவு நலன்களையும் இறுகலாக்க வேண்டி, உறுதியாக்க வேண்டித் ‘திருக்குறள்' —என்னும் இன நலக் காப்பு நூலை எழுதி நிலைப் படுத்தினார். ஆனால், தமிழின நலத்தைத் தம்நலமாகக் கரவால் மாற்றிக் கொள்ள முனைந்த ஆரிய இனத்தவர், அந்நூலின் கருத்துகளுக்குத் தம் வேத, புராண விளக்கம் கற்பித்தனர், தம் ‘மனுதர்மம்’ என்னும் வருண வொழுக்கத்திற்கு, அவ்வரும் பெரும் பொதுநல நூலை - மாந்த நல நூலை - தமிழின மேம்பாட்டு வரலாற்று நூலைக் காப்பாக அமைத்துக் கொள்ள விரும்பினர். ஏமாளித் தமிழர்களும் ஆரிய அடிவருடிப் பாப்புலவோர்களும், அவர்களின் கரவான வைதீக ஆக்கக் கருத்துகளுக்கு அடிசாய்ந்து, திருக்குறள் மெய்யியல் கோட்பாட்டையே திசைதிருப்பினர். கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக இந்தக்கதை தொடர்ந்து நடந்து வந்தது.

இன்று, பெரியாரின் பெருமுயற்சிக்குப் பின் தமிழினம் தன்னை ஈடேற்றிக் கொள்ளும் முனைப்பில் கண் விழித்துத் தலைதூக்கிக் காலெடுத்து நடைகோலத் தொடங்கி விட்டது: இந்த நிலையில், இயற்கையின் படிநிலை வளர்ச்சித் தேற்றத்தின் முறைப்படி, நீண்ட நாள் பட்டினி கிடந்த பஞ்சக் கூட்டம், சோற்று உருண்டைக்கு அடித்துப் பிடித்துக் கொண்டு முந்துறுவதுபோல், தமிழின நலங்காக்க எழுந்த இயக்கங்களின் தலைவர்கள் தான்முந்தி, நான் முந்தி என முண்டியடித்துக் கொண்டு, இனம் பேணுதற்கு எழுச்சி நடை போடுகின்றனர். இந்நிலை ஒருவகையில் நல்லதே' ஆனாலும், எதிர்பார்க்கும் விளைவைக் குறைக்கும் அல்லது குலைக்கும் தன்மையது.

வண்டியில் இடம்பிடிக்க முந்துபவனும், பந்தியில் இலை பிடிக்க முனைபவனும், எப்படி அடுத்து வருபவனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுத் தான் முன்னுக்குப் போய் முதலிடத்தைப் பிடிப்பதற்கு முயல்கிறானோ, அப்படியே இன முயற்சிக்குத் தன்னை முன்வைத்துக் கொள்ள விரும்புபவரும், அடுத்தவர் முயற்சியைத் தடுத்து நிறுத்தி விட்டுத், தாமே முன்னுக்கு நிற்பவராகப் பொதுமக்களுக்குத் தம்மைக் காட்டிக் கொள்ள விரும்புகின்றார். இந்நிலை ஒரு வகையில் தவறுன்று; குற்றமும் அன்று என்று கூடச் சொல்லலாம். ஆனால், பயனைக் குறைவு படுத்தி விடும்; அல்லது கெடுத்து விடும் வண்டிக்கு வந்தவர்களிலாகிலும் முன்வந்தவர், பின்வந்தவர் என்னும் முன்னுரிமைத் தகுதி என்று ஒன்றுண்டு: இனி, பந்திக்கு வந்தவர்களிலாகிலும் அழைக்கப்பட்டவர் அழைக்கப்படாதவர் என்னும் தகுதிநிலைகள் உண்டு. ஆனால் இனநலம் கருதும் பொதுத் தொண்டுக்கு வருபவர்களுக்கு, வரையறுக்கப்பட்ட எந்தத் தகுதிநிலையும் இல்லை. யார் வேண்டுமானாலும் தம் பணத்தை அடிப்படையாக வைத்தோ, தம் அரசியல் ஈடுபாட்டை வைத்தோ, தம் அடாவடித்தனத்தைக் கொண்டோ இனநலத் தொண்டுக்கு என்று முன் வந்து விடலாம். இவர்களுள் உண்மையான தொண்டுணர்வு உள்ளவர்கள் யார், இல்லாதவர்கள் யார், நேர்மையாக உழைப்பவர்கள் யார் உழைக்காதர்கள் யார், தகுதி உள்ளவர்கள் யார், இல்லாதவர்கள் யார், பொது நலம் கருதுபவர்கள் யார், தந்நலம் கருதுபர்கள் யார்—என்றெல்லாம் பொதுமக்கள் சரியாக அறிந்து கொள்ள வியலாத நிலையில்தாமே உள்ளனர். இந்த நிலை, அவர்களுக்கு மேலும் பொதுநல அல்லது இன நல ஈடுபாட்டு வாய்ப்பை மிகவும் எளிதாக்கி விடுகிறது; அல்லது அதிகமாக்கி விடுகிறது: எனவே நம் நாட்டைக் குறிப்பாகத் தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில், வேறு எந்தத் துறையைப் பார்க்கினும், மக்கள் தொண்டாற்றுதற்கு, அரசியலை அடிப்படையாக வைத்துப் பெரும்பாலார் முன் வந்து விடுகின்றனர். இது மிகவும் கொடியது: கொடுமையானது. இன்னுஞ் சொன்னால், நம் இனமும், நாடும், ஏன். மொழியும் கூட முன்னேறாமைக்கு இதுதான் தலையாய காரணமாகும்!

நம் மக்களிடம் உணர்ச்சி இருக்கிறது; அறிவுஇல்லை. ஒரு மாந்தநிலை முன்னேற்றமடைய உணர்ச்சியும் வேண்டும். அதற்கிணையான அறிவு நிலையும் வேண்டும் அறிவுள்ளவர்கள் பலர் உணர்ச்சியற்றிருப்பதைப் பார்க்கிறோம், அப்படியே உணர்ச்சியுள்ளவர்கள் பலர் அறிவுநலம் குன்றியிருப்பதைப் பார்க்கிறோம்: வெறும் உணர்ச்சி அறிவாகாது; அப்படியே வரண்ட அறிவும் உணர்வை ஊட்டிவிடாது. வெறும் உணர்ச்சியால் வளர்ந்துள்ள நம் மக்களைப் பல வகையாலும் தூண்டி விட்டுத் தான், நம் நாட்டு அரசியல்காரர்கள் அவர்கள் அறிவு நலன்களையும் வாழ்க்கை நலன்களையும் கொள்ளையிட்டுக் கொடுமைப்படுத்தி, மேலும் மேலும் அவர்களைக் குருட்டுப் பாதைகளிலேயே போய்க் கொண்டிருக்கும் படி செய்கிறார்கள்! இது மிக மிகக் கேடானது; இன நலத்தைக் கெடுப்பது.

இந்த நிலைகளைச் சரிசெய்ய நம் மக்களுக்கு முதலில் தெளிவான அறிவூட்டி அவர்களை விழிப்படையச் செய்ய வேண்டும், மலர்ச்சியுறச் செய்ய வேண்டும், அந்த வகையில் நாம் இன்னும் பல படிநிலைகளைக் கடந்தாக வேண்டும்; பல தடைகளைத் தாண்டியாக வேண்டும். வெறும் கூட்டங்களும், மாநாடுகளும் இவற்றைச் செய்து விட முடியாது. கண்களுக்குப் படாம் போட்டு மூடி, மக்களை ஒரு திசையையே நோக்கிப் பார்க்கும்படி செய்து விடக் கூடாது. அது அவர்களை எளிதில் முன்னேற்றி விட முடியாது; முடியவே முடியாது அதனால்தான் நம் தலைவர்கள் இத்தனை ஆண்டுகள் ஆகியும் மக்களை விழிப் படையச் செய்ய முடியவில்லை. இதுபற்றி நாம் மிகுதியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்த, நம் இனத் தலைவர்களெல்லாம் ஒன்றுபட வேண்டும் என்று அடிக்கடி பேசி வருகிறோம்; எழுதிவருகிறோம் எதற்கு?—அதைப் பற்றியும் நாம் மிகுதியாக எண்ணிப் பார்க்க வேண்டும். இனம் ஒன்றுபட வேண்டும் என்பதும், இனத்தலைவர்கள் எல்லாம் ஒன்றுபடவேண்டும் என்பதும், இனத்தை முன்னேற்றுவதற்குத் தானே தவிர, கீழ்மைப் படுத்துவதற் கன்று. இனம் ஒன்றுபடுவது நம் இனத்துக்கு ஏற்பட்ட, ஏற்படுத்திய கொடுமைகளை ஒரே குரலில் எடுத்துக் கூறிப் போராடி, வல்லாண்மைக் காரர்களின் கொடுமைப் பிடிகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதற்கே ஆகும். ஒட்டு மொத்தமாக நாம் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருப்பதற்காக இல்லை.

(தொடரும்)

உ.த.மு.க.

நெல்லை (தெற்கு) மாவட்ட, வட்டப் பொறுப்பாளர்கள் அமைப்புக் கூட்டம்.

பேரன்பீர்,

தி.பி. 2015, சுறவம் 15-ஆம் பக்கல் (29-1-84) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் - நெல்லைச் சந்திப்பில் உ.த.மு.க. நெல்லை (தெற்கு) மாவட்ட, வட்டப் பொறுப்பாளர்கள் அமைப்புக் கூட்டம் நடைபெறும். மாவட்டத்தில் ஊர்கள் தோறும் கிளைகள் அமைப்பது. இரண்டாவது மாவட்ட மாநாடு கூட்டுவது ஆகியவை பற்றி முடிவு செய்யப்பெறும். பொறுப்பாளர் யாவரும் தவிராது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இங்ஙன்
தென்னவன்கோ
மாவட்டச்செயலர்.

தொடர்புக்கு :
4, இரேனியசு தெரு,
பாளையங்கோட்டை-627002.

மற்றிந்நாள் உலகினில் கடையவன் நீதான்!

அகம் கரியார்

— தமிழவேள்

4. புத்துயிர் ஊட்டியோர்!

"திருவள்ளுவருக்குப் பின் மக்கள் இனத்தை அனாவி எண்ணிய ஒரே தலைவர் பெரியார் தாம் . . . சாக்ரடீசு, புத்தர், ஏசு, நபி, காந்தி போலும் காலத்தின் எல்லைபாக அமர்ந்து விட்டவர் பெரியார். ஆனால் அவர்கள் செய்த அருஞ்செயல்களை விட ஒரு படி மேலாகவே செய்தார் பெரியார் .... அவர் செய்த முயற்சிகள், போராடிய போராட்டங்கள், பேசிய பேச்சுகள் நடந்த நடைகள் ஆகிய அனைத்தும் இத்தமிழ் இனத்திற்கு முழுவதுமாகப் பயன்பட்டன ... மிகப் பெரிய ஒரு நாகரீக இனமான தமிழ் இனத்தைக் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக அடிமைப் படுத்திவந்த ஆரியத்தின் நச்சுவேரை அகழ்ந்து அகற்றுவதில் அவர் போராடிய முயற்சிகள் இவ்வுலகம் உள்ளளவும் இதில் வாழும் தமிழினத்தவர்களால் நன்றியுடனும் பெருமையுடனும் நினைக்கப்படும்." — பெரியாரைப் பாராட்டிப் பெருஞ்சித்திரனார் அவர்கள் எழுதும் எழுத்துகள் இவை.

ஆனால், தம்மை நடுநிலையாளர் போல் காட்டிக் கொண்டு, தம் இனத்தவர்க்கே பெரிதும் பரிந்து செயற்படும் ஓர் இதழின் ஆசிரியர் பெரியாரைப் பற்றிச் சொல்வது என்ன தெரியுமா ? "சாதி வெறி பெரிதும் குறைய தமிழகத்தில் பெரியார் ஒரு முக்கிய காரணமாக இருந்தார். ஆனால் பிற்காலத்தில் வேறு வகையில் சாதி வெறியைத் தூண்டி விட அவரே காரணமாகி விட்டார். அவருடைய கொள்கைகள் சிலவும், கருத்துப் பரப்புதல்கள் (பிரசாரங்கள்) பலவும் மிகவும் துயரத்து (வேதனை)க் குரியவை(!) ஒரு குமுகச் சீர்திருத்தக்காரராக (வாதியாக)த் தொடங்கியவர், போகப் போகப் பொழுது போக்குக்கு உதவத் தொடங்கி விட்டார்!"

பெரியார் பற்றிய இந்த இரு பாராட்டுகளைப் படித்தாலே போதும். தமிழர்க்கும், தமிழர் என்று சொல்லிக் கொள்பவர்க்கும் உள்ள வேறுபாட்டை நன்கு தெரிந்து கொள்ளலாம்.

அவர்கள் தங்களையும் தங்களைச் சார்ந்தவர்களையும் புகழ்வார்கள். தமிழர்கள் எவ்வளவுதான் தகுதியுடையவராயினும் அவர்களைப் பற்றிக் குறைதே சொல்வார்கள். அல்லது ஒன்றும் கூறாமல் இருட்டடிப்புச் செய்வார்கள்.

'தாமரைத்திரு' என்னும் விருதுபெற்ற இசைவாணர் மதுரை சோமு அவர்களைப் பாராட்டிக் கலா மந்திர் என்னும் மன்றம் ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தது. அவ்விழாவில் முதல்வர் ம.கோ.இரா அவர்கள் பேசிய பேச்சு கிழமை ஏடு ஒன்றில் வந்திருந்தது. "இன்னொரு பிரச்சினை பற்றியும் சொல்லப் போகிறேன். தவறாக எண்ணக் கூடாது" என்ற பீடிகையுடன் முதல்வர் சொன்னாராம். "சங்கீத உலகில் பிராமணர் அல்லாத சங்கீத வித்துவான்களைப் பிராமணர்கள் பாராட்டுவதில்லை; மதிப்பதில்லை என்ற நிலை இருப்பதாக வெளியே பேசிக் கொள்கிறார்கள். இன்றைய விழாவின் மூலம் அத்தகைய பேச்சு முறியடிக்கப் பட்டிருக்கிறது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று பேசினாராம்.

இதிலிருந்து ஓர் உண்மை நமக்கு நன்றாகத் தெரியவில்லையா? தமிழர்கள் எந்தத் துறையில் சிறந்திருந்தாலும் அவர்களை அந்தக் கூட்டத்தினர் மதிப்பதில்லை; பாராட்டுவதில்லை என்பது தானே அது?

நீண்ட வரலாற்று நெடுங்கதைகளை எழுதி வரும் ஒருவர், ஒரு கிழமை ஏட்டில் தம் சொந்த வரலாற்றையே எழுதி வந்தார். அதில் அவர் எழுதியிருந்த ஒரு பகுதி இது : "இந்தச் சமயத்தில் தமிழுக்கு உயிரூட்ட தமிழகத்தில் மூவர் கிளம்பினார்கள். ஒருவர் கல்கி. இன்னொருவர் சத்தியமூர்த்தி. மூன்றாவது அடியேன். முந்திய இருவரை விட நான் பட்டபாடு அதிகம் — தமிழ் அப்படி ஒன்றும் பயங்கரமான பாஷை அல்ல என்பதையும் மிக இனிமையானது என்பதையும் 1930-இலிருந்து 1934க்குள் சத்தியமூர்த்தி அவர்களும் கல்கி அவர்களும் எடுத்துக்காட்டித் தமிழுக்குப் புத்துயிர் கொடுத்தார்கள்!"

எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? தமிழுக்கு இலக்கணம் செய்து கொடுத்தவன் அகத்தியன் தான் என்றார் பாரதியார். இந்த நெடுங்கதை எழுத்தாளரோ, தமிழுக்குப் புத்துயிர் ஊட்டிய மூவர் என்று தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களை மட்டுமே குறிப்பிட்டுக் கொள்கிறார். தனித் தமிழ்த் தந்தை மறைமலையடிகளார், தமிழ்ப் பெரியார் திரு.வி.க., திராவிடத் தந்தை பெரியார் ஈ.வெ.ரா., நாவலர் சோமசுந்தர பாரதியார், போன்ற தமிழர்களில் ஒருவர் பெயரைக் கூடவா சேர்த்து எழுதக் கூடாது? இவர்கள் எல்லாம் தமிழுக்கு உயிரூட்டவில்லையா? கல்கியும் சத்தியமூர்த்தியும் தாமா உயிரூட்டியவர்கள். எத்தனைப் பெரிய இருட்டடிப்பு இது? தமிழர்கள் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

அப்படியே, தமிழால் நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மாத இதழின் ஆசிரியர் எழுதுகிறார் : "இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நடையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியவர் கல்கி தான்! இன்றைய தமிழ் எழுத்தாளர்கள் நடையெல்லாம் கல்கியின் நடை தான்!"

உண்மையிலேயே இந்த நூற்றாண்டில் தமிழ் நடையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியவர்கள், திரு.வி.கவும், மறைமலையடிகளும் அண்ணாவும், மு.வ.வும் அல்லவா? பின் ஏன் அவர் கல்கியை மட்டும் குறிப்பிடுகிறார்? கல்கி மட்டுந்தான் அவர் பிறந்த இனத்தில் பிறந்தவர் என்பதனால் தானே?

ஒருமுறை என் நண்பர் ஒருவருடன் சென்னை வானொலி நிலையத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே வரவேற்பு அறையில் அமர்ந்திருந்தபோது ஓய்வு பெற்ற உயர்முறைமன்ற நடுவர் ஒருவர் அங்கு வந்தார். அவருடைய ஆங்கிலப்பேச்சு ஒன்றும் அன்று ஒலிபரப்பாவதாக இருந்தது. வானொலி நிலையத்தைச் சேர்ந்த ஓர் அம்மையார் அவரை வரவேற்று அவரோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். நானும் நண்பரும் அவர்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

அவர்களின் உரையாடலின் இடையே தமிழ் வளர்ச்சி பற்றிய பேச்சு வந்தது. அப்போது அந்த நடுவர் கூறினார்; "அந்த நாட்களில் இருந்த மு. இராகவையங்கார், இரா. இராகவையங்கார், உ.வே. சாமிநாதஐயர் போன்ற தமிழ்ப் புலவர்கள் இன்று எங்கே இருக்கிறார்கள்?" என்றார்.

அவருக்குத் தெரிந்த தமிழ்ப் புலவர்கள் அவர்கள் மூவர்தாமா? வேறு தமிழ்ப் புலவர்களை அவர் அறிய மாட்டாரா? அம்மூவரையும் விடச் சிறந்த தமிழ்ப் புலவர்கள் தமிழகத்தில் வாழ்ந்திருந்தார்கள் என்பது அவருக்குத் தெரியாதா? தெரியும்! பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கம்பர் என்று பாராட்டப்பட்ட திரிசிரபுரம் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரனார் (உ.வே.சா. அவர்களுக்குத் தமிழ் கற்பித்தவர்), மாயூரம் வேதநாயகம் பிள்ளை, கா. நமச்சிவாய (முதலியார்), கா. சுப்பிரமணியனார், பண்டித மணி மு. கதிரேசனார், தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஆறுமுக நாவலர், கதிரைவேலர், விபுலாநந்தர், வ.உ.சி, இலக்குவனார், புலவர் குழந்தை - என்று இப்படி எத்தனைத் தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்! அவர்களில் ஒருவர் பெயரை சொல்லக் கூட மனம் வரவில்லையே அந்த நடுவருக்கு? அதனை என்னவென்பது? அவர்களுடைய உள்ளக் கிடக்கையைத் தமிழர்கள் தாம் உணர்ந்து கொள்வது எப்போது? அவர்களுக்குப் பரிந்து பேசவும் சில தமிழர்கள் முன் வருகிறார்களே என்று மனம் நோகத்தானே வேண்டியிருக்கிறது?

பொற்செழியன் அவர்களின் விழைவுக் கொடை!

தொடக்கக் காலத்திலிருந்து இன்று வரை தென்மொழிக்கும் எனக்கும் தோன்றாத் துணையாகவும் கொள்கைத் தூணாகவும் நிலைநின்று இயங்கி வரும் அன்புள்ளம், வெங்காலூர் தென்மொழி பொற்செழியன் இணையர்க்கு கடந்த 5-12-83 அன்று பிறந்த பெண் குழந்தை தாமரையின் நினைவாகத் 'தமிழ் நிலம்' வளர்ச்சிக்கென அவர் விடுத்த விழைவுக் கொடைத் தொகை உரு 100/-(உரு நூறு) கிடைக்கப் பெற்றேன். அவர்க்கு என் நெஞ்சு நிறைந்த நன்றி உரியவாகுக. குழந்தை தாமரை எல்லா நலன்களும் பெற்று, இவள் தந்தை என் நோற்றான் கொல் எனச் சான்றோர்களால் வாழ்த்துப் பெறும்படி, நிறை வாழ்வு வாழ வாழ்த்துகின்றேன். — பெருஞ்சித்திரனார்.

ஈழ விடுதலையில் அமிர்தலிங்கத்தின் பங்கு

மீனவன்

ஈழ விடுதலை இயக்கம் இன்று ஒரு நெருக்கடியான கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடியின் நடுவமாயிருப்பது அமிர்தலிங்கத்தின் இன்றைய நிலைப்பாடு. அவர் இன்று விடுதலை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தத் தடையாக மட்டுமின்றி அதற்கு எதிராகவும் நிற்கிறார்.

இதில் வியப்பதற்கோ, வருந்துவதற்கோ ஒன்றுமில்லை. குமுக இயக்கங்களில் அமிர்தலிங்கம் போன்றவர்கள் ஒரு குறிப்பிட்ட பங்கை ஆற்றுகிறார்கள். ஒரு மக்கள் கூட்டத்தை ஆண்டு கொண்டிருக்கும் குழுக்களுக்கு வெளியிலிருந்து அறைகூவல் வரும் போது தம் ஆளுமையை நிலைப்படுத்திக் கொள்ள தமக்குக் கீழேயுள்ள மக்களின் துணையை அக்குழுக்கள் நாடுவது வரலாற்றில் கிட்டத்தட்ட எப்போதுமே காணப்படும் ஒரு நிகழ்முறையாகும். யாழ்ப்பாணத்திலுள்ள படித்த பணக்காரர்களுக்கு இத்தகைய ஓர் அறை கூவல் சிங்களவரிடமிருந்து வந்தது. அமிர்தலிங்கம் குழுவினர் "ஈழ விடுதலை" என்ற முழக்கத்தை முன்வைத்துத் தேர்தலில் வெற்றியும் பெற்றனர். ஆனால் அவர் திட்டமிடாமலே எழுந்த ஒரு சூழல் அவருக்கு உதவி புரிவதாக ஒரு கட்டத்திலிருந்தது 'விடுதலைப் புலிகள்" எனும் தீவிர இளைஞர் இயக்கம் அவர்களது விழைவுகளுக்கு விரைந்த தீர்வு தருமென்று அவர்கள் கருதினர். ஆனால் இவர்களின் விழைவுகளுக்கு அப்பாலும் இத்தீவிர இளைஞர்களின் விழைவுகள் சென்றது தான் இன்றைய நெருக்கடி நிலைக்குக் காரணம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் பின்னால் மக்கள் திரண்டு நிற்பதையும், அம்மக்கள் தம் இலக்கில் நிலையாயிருப்பதையும் கண்ட சிங்கள அரசு, பழைய ஆளும் குழுக்களோடு அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொண்டு, உடன்பாடு காண முன் வந்தது. தமக்குக் கீழே அடங்கி ஒடுங்கிக் கிடந்த மக்களோடு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதை விட சிங்கள ஆளும் குழுக்களோடு கூட்டுச் சேர்வதே தம் நலன்களுக்கு உகந்தது என்று அமிர்தலிங்கம் குழுவினர் கருதுவது இயல்பே.

இந்தக் கட்டத்தில் அமிர்தலிங்கம் தம் குழுச் சார்பைத் தெற்றெனக் காட்டி நிற்கிறார். ஆனால் சிலர் அவர் "அறியாமை"யால் இந்நிலையை மேற்கொண்டுள்ளார் என்று கருதி ஒற்றுமை முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். இது மிகவும் கேடு பயக்கும் ஒரு முயற்சியாகும்.

ஒவ்வொரு குமுக இயக்கமும் ஓர் உயிரியக்கமாகும் முளைத்து வரும் செடியில் முளை, இலை ஏற்கும் பங்கை அமிர்தலிங்கம் போன்றோர் ஏற்கின்றனர். செடியில் தன் பணி முடிவடைந்ததும் முளையிலை வாடி உதிர்ந்து விடும் ஆனால் குமுக இயக்கங்களில் அமிர்தலிங்கம் போன்றோர் இயக்கத்தின் குறிக்கோளுக்கு எதிரிகளாக மாறி விடுகின்றனர். பாலத்தீனிய விடுதலை இயக்கத்தில் யாசர் அரபத்தின் நிலையும் ஏறக்குறைய அமிர்தலிங்கத்தின் நிலை தான். இருவரும் ஒரே நிகழ் முறையின் வெவ்வேறு கட்டங்களில் இருக்கின்றனர்; அவ்வளவு தான்.

இந்நிலையில் அமிர்தலிங்கத்தை மீண்டும் கூட்டுச் சேர்க்க முயல்வது பெருங் கேட்டினுக்கு வழிகோலும், முன்னாள் கூட்டாளிகள் பகைவர்களாகும் போது, மூலப்பகைவனை விட அழிவாற்றல் மிகுந்தவர்களாகின்றனர். ஆனால் அவர்களை மீண்டும் நட்பாக்கும் போது அதைவிட அதிக அழிவை விளைவிப்பார்கள். கடலில் மூழ்கி விட்ட கப்பலிலிருந்து தப்பியவன், கப்பலுக்கு "நன்றி" பாராட்டுவோம் என்ற எண்ணத்தில் கப்பலைத் தன் கழுத்தில் பிணைத்துக் கொண்டு நிற்க முற்படுவது போன்றது இது.

அத்துடன் இந்த 'இணைப்பு" முயற்சியில் ஈடுபடுவோரின் மனப்பான்மையையும் நம் புரிந்து கொள்ள வேண்டும். வெளிப்படையாக எதிரிபோடு உடன்பாடு கொண்டு விட்ட ஒரு குழுவினரின் உறவை இவர்கள் தேடுகிறார்களென்றால் இவர்களும் அடிமட்ட மக்களோடு உறவை விரும்பாமல், மேல் வகுப்புகளோடு தான் தங்கள் நலன்கள் பிணைந்து கிடக்கின்றன என்று கருதுகிறார்கள் என்பது தான்

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

தமிழ்மொழியைப் பேணுதான் தமிழினத்தைப் பேணுதான்!

ஐரோப்பா வாழ் தமிழர்க்கு பிரான்சு உலகத் தமிழின முன்னேற்றக் கழக வேண்டுகோள்!

அன்பிற்கும் தமிழின விடுதலைக்கும் உரிய ஆற்றல்மிகு தமிழ் நெஞ்சங்களே!

வணக்கம்.

அரசியற் கட்சிகளின் கிளைகளைப்போல—அவர் களுக்குத்தலை போவதற்காக ஓரிரு தமிழ் அமைப்பு கள் சில ஐரோப்பிய நாடுகளில் நடத்தப்படுகின்றன. ஆனால் தமிழின மீட்சிக்குப் பகுத்தறிவு, சீர்திருத்தம் அறிவியல், உரிமை, பொதுமை, விடுதலை... இன்னோ ரன்ன கொள்கைகளின் அடிப்படையில் இயங்கிவரும் உலகத் தமிழின முன்னேற்றக்கழகம் பிரான்சிலும் செருமனியிலும் கால் ஊன்றியுள்ள போதிலும், பிற ஐரோப்பிய நாடுகளில் உடனடியாக அமைக்கப்பட வேண்டிய இன்றியமையாத் தேவை இப்போது ஏற்பட்டுள்ளது.

தமிழீழச் சிக்கலை அவிழ்க்கத்தெரியாத அரசியல் பேச்சு மாறிகள் மேடைப் பேச்சுக்கும், மாநாட்டு ஆரவாரங்களுக்கும், தமிழீழ மக்களைப் பகடைக் காய்களைப்போல பலி கொடுத்து வருகின்றனர். உண்மையான தனித்தமிழ்நாடு வேண்டும் என்று துணிந்து குரல் கொடுக்காத இவர்களால் பொது மக்களின் கவனம் திசைதிருப்பப்படலாமே அன்றித் தமிழினத்திற்கென்று தனித்தமிழீழமோ, தனித்தமிழ் நாடோ உருவாகப் போவதில்லை.

தொன்று தொட்டுத் தமிழினம் ஆரியரது சூழ்ச்சியால் சிதைந்து அழிந்து கொண்டுள்ளது. ஆரிய இனத்தார் இந்தியப் பார்ப்பனரது விளம்பரத் திறமையால் ஐரோப்பாவையும், ஈரான் போன்ற இடைநிலை நாடுகளையும், அமெரிக்கா, உருசியா போன்ற வல்லரசுகளையும் 'ஆரியர்' என்ற இன அடிப்படையில் தமக்குத் துணையாக்கிக் கொண்டு வருவதை நாம் அறிவோம்!

இந்தியாவில் 23 திரவிட—தமிழின மொழிகளாகப் படர்ந்துள்ள இனம் தமிழ்இனம் ஆகும். தமிழினத்தார் நாகர், உகிரர், கரியர் என்ற முப்பெரும் பிரிவுகளாக—வரலாற்றுக் காலத்திற்கும் முன்பே—உலகம் முழுமையும் பரவிப் பல்கியுள்ளனர் என்னும் உண்மை, அண்மையில் சேம்சு சர்ச்சுவாடு என்னும் அமெரிக்கப் பேரறிஞரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எகிப்து, சீனம், சப்பான், மெக்சிக்கோ, பிரேசில் ஆகிய நாடுகளில் நாகரது தடயங்களும், ஐரோப்பாவில் பாசுக்குள், பிரித்தானியர்கள் செல்த்துகள், அயர்லாந்துக்காரர்கள், கோர்சிகர்கள், சோதிக்கர்கள், சார்தேனியர்கள், அர்மீனியர்கள், குருதுகள் போன்ற உகிரர் வடிவங்களும், உயூகோசுலாவியர்கள், பல்கேரியர்கள், உருமேனியர்கள், போலந்துக்காரர்கள், அங்கேரியர், ஆள்பேனியர்கள் போன்ற நாகர்—கரியர் கலப்புத் தடங்களும், கரிபீயன் தீவுகளிலும், தென்னமெரிக்காவிலும், பசிபிக்கு—அட்லாண்டிக் கடல் தீவுப்பகுதிகளில் கரியர் இன அடையாளங்களும் இன்றுவரை அப்படியே நிலவி வருவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டு காட்டி வியந்து வருகின்றனர்.

இந்தியா ஆரியரது கடும்பிடிக்குள் சிக்கி இன்று தத்தளிக்கின்றது! தமிழர் தனித்து நின்று தமிழர் மட்டுமே அப்பிடியிலிருந்து விலகுவதற்கு முயன்றாலும் அதை இக்கால உலக வல்லரசுக் கெடுபிடிச் சூழலில் வெற்றிபெறும் என்று கூறவியலாமல் உள்ளது. நாம் நம் தமிழின வலிவை இந்திய அளவில் திரட்டுவதென்றாலேயே, ஆரியத்திற்கு எதிரான சமவலிமை வாய்ந்த இனமாக உலகத்திற்கு நம்மை இனங்காட்ட முடியும்! தமிழீழத்தில் நடந்த கொடுமைகளைத் தமிழின மக்களால் ஆளப்படும் மோரீசியசும், மதகாசுக்கரும் தமிழ்நாட்டுடன் சேர்ந்து ஆதரிப்பதையும், இன்று தென்னிந்தியாவில் தெலுங்கு தேசமும் கன்னடநாடும் மலையாள நாடும் நமக்குத் துணையாக உரிமைக்குரல் எழுப்பி வருவதையும் கண்டு தமிழின முன்னேற்றத்திற்கு வழி காண்போமாக!

பிரான்சிலும் செருமனியிலும் 'உலகத்தமிழின முன்னேற்றக்கழகம்' அமைக்கப்பட்டுள்ளது. ஆலந்திலும், இங்கிலாந்திலும், பெல்சியத்திலும், நார்வேயிலும், சுவிட்சர்லாந்திலும் அமைவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் விரைவில் அமைத்தல் வேண்டும். உலக அரங்கில் மேலைநாடுகளில் வாழும் தமிழின மக்கள் ஒன்றுபட்டுக் காட்டுவதன் மூலம் தாயகத் தமிழர்கட்குத் தமிழின உணர்வை மூட்டி இந்தியா முழுவதும் வாழும் தமிழின மக்களுக்கென்று ஒரு நாட்டை—உலக உருண்டையில் யாதானும் ஓர் இடத்தில் அமைத்திட இயலும். இவ்வழியில் திரண்டு வரும் தமிழீழ விடுதலைக்கு உலகமெங்கணும் கால் ஊன்றி உலகக் கருத்தைத் திரட்டிடவும் வென்றிடவும் முடியும்.

எனவே தமிழ், தமிழினப்பற்றுள்ள எல்லா மக்களும் ஆங்காங்கே — ஐரோப்பிய நாடுகளிலும், உலகின் பிற நாடுகளிலும் உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தை நிறுவித் தமிழின முன்னேற்றத்திற்கு உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

பிரான்சில் தற்காலிகமாக அமைந்துள்ள உலகத் தமிழின முன்னேற்றக்கழக ஐரோப்பிய அமைப்புடன் தொடர்புகொண்டு—தேவைப்பட்டால் தக்கவரை நேரடியாகக் கண்டு, பேசி, தமிழினம் வாழக்கூடிய ஐரோப்பியநாடுகள் எல்லாவற்றிலும் உலகத் தமிழின முன்னேற்றக்கழகம் அமைத்திடுமாறு வேண்டுகின்றோம்.

தமிழினத் தந்தை பெரியாருக்கு அண்மையில் பிரான்சில் திராவிடர் கழகப் பொதுச் செயலர் வீரமணி அவர்களைக் கொண்டு பெருவிழா எடுத்துப். பெரியார் சிலையைப் பெரும்பேரறிஞர்—விடுதலைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களைக் கொண்டு திறந்து, உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் பெரியாரின் அடியொட்டித் தமிழின முன்னேற்றத்திற்கு உழைப்பதற்கு இயங்கும் பேரியக்கம் என்பதை வலியுறுத்திக் காட்டியிருப்பது உலகறியும்!

அனைத்துத் தொடர்புகளுக்கும் அணுகுக;

1. Mr. ARIMA DHANARAJU
   President: O.I.P.T. (உ.த.மு.க.),
   Chez mr. Edouard Sampath,
   23, Louis Saint Just,
   93420-Villepinte, FRANCE

(அல்லது)

2. உ.த.மு.க. தலைமையகம் (தமிழ்நாடு) விரைவில் அமையவிருக்கும் விடுதலைப் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் 2ஆம் ஐரோப்பியச் சுற்றுச்செலவின் போது. ஐரோப்பாவெங்கணும் கிளைகள் அமைத்திட—வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்வீர்!

உலகத்தமிழின முன்னேற்றக்கழகம்.
பிரான்சு
(தற்காலிக ஐரோப்பிய அமைப்பகம்)

"அண்ணா!"

"என்ன தம்பி?"

"கம்பரை ஆதரித்துப் போற்றிய வள்ளலின் பெயர் என்ன அண்ணா?"

"சடையப்பர்"

"கம்பர் மிகுந்த நன்றியுணர்வோடு அந்த வள்ளலின்பெயர், தாம் இயற்றிய இராமாயணத்தில் நூறு பாட்டுக்கு ஒரு பாட்டில் வருமாறு வைத்தும் பாடினாராமே!

"ஆமாம்"

"ஆனால் அந்தநூலை அரங்கேற்றிய போது அதற்கு எதிர்ப்பு ஏற்பட்டதாமே?"

"ஆமாம். இராமன் தெய்வம்; தெய்வத்தைப் பற்றி எழுதும் பாவியத்தில் ஒரு மாந்தனின் (அதிலும் நான்காம் சாதியைச் சேர்ந்தவனின்) பெயர் அடிக்கடி வருவது சரியன்று என்று சொல்லி ஒரு கூட்டம் எதிர்த்ததாம்"

"அந்த எதிர்ப்பைக் கண்டு கம்பர் என்ன அண்ணா செய்தார்?"

"என்ன செய்தார்? தலைவணங்கினார்! நூறு பாட்டுக்கு ஒருபாட்டில் வந்த சடையப்பரின் பெயரை நீக்கி, ஆயிரம் பாட்டுக்கு ஒரு பாட்டிலாவது வைக்க அந்த எதிர்ப்பாளர்களின் இசைவை வேண்டினார். அவர்களும் போனால் போகிறது என்று இசைந்தார்களாம்."

"இது என்ன அண்ணா கொடுமை! அந்தக்காலத்திலும் அவர்களின் வல்லாண்மைதானா?"

"எனக்குத் தெரியாது தம்பி!" — தமிழவேள்

பொதுவுடைமை நாட்டில்...!

கிழக்கு செருமனி (பொதுவுடைமை நாடு)யின் சிறை ஒன்றில், ஓர் அறையில் அடைக்கப்பட்டிருந்த மூன்று தொழிலாளக் குற்றவாளிகள் பின் வருமாறு பேசிக் கொண்டார்கள்.

ஒருவன் மற்றவனைப் பார்த்துக் கேட்டான்: 'உன்னை ஏனப்பா உள்ளே தள்ளினார்கள்?'

'தொழிற்சாலைக்கு, ஐந்து நிமையம் காலத் தாழ்த்தமாக வந்த குற்றத்திற்காக,

இரண்டாமவன் சொன்னான்.

"உன்பாடு தாழ்வில்லையே' நான் ஐந்து நிமையம் முன்னால் வந்தேன், ஏதோ சூழ்ச்சி செய்யும் நோக்கத்துடன் வந்ததாகச் சொல்லி உள்ளே தள்ளி விட்டார்கள்"

மூன்றாமவன் சொன்னான்;

'என் கதையைக் கேளுங்கள் — நான் சரியான நேரத்திற்குச் சென்றேன். அப்படியும் என்னைச் சிறைப் படுத்தி விட்டார்கள்.'

'காரணம்'

'என் கடிகாரம் மேற்கு செருமனி (பொதுவுடைமையல்லாத நாடு)யில் வாங்கப்பட்டதாயிருக்கும் என்ற ஐயமாம் அவர்களுக்கு!'

—நன்றி! தி'பரவட்டும்'
'அடைக்கப்பன்' -சென்னை)-15-12-83

கழகச் செய்திகள்

நெல்லைமாவட்டம் உ.த.மு.க. சார்பில் பிப்ரவரி 84-இல் பாவலரேறு வரவேற்பும், நிகழ்ச்சிகளும்!

கடையநல்லூர் உ.த.மு.க. செயற்குழுதீர்மானம்!

கடையநல்லூர் உ.த.மு.க. செயற்குழுக்கூட்டம் கடந்த 23-12-83 அன்று மாலை 5-45 மணிக்குக் கூடி, எதிர்காலக் கழகப்பணிகள் குறித்தும், ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்டுவரும் இன்னல்கள் குறித்தும் கலந்துரையாடி, சில நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது.

அவற்றின்படி, ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று நமது கழக அமைப்புகளை நிறுவியும், கொள்கை விளக்கம் செய்தும் வெற்றியுடன் திரும்பிய கழக முதல்வர் பாவலரேறு அவர்களை நெல்லை மாவட்டம் (வடக்கு) உ.த.மு.க. சார்பில் வரவேற்பும் சிற்றூர்ப் புறங்களில் கொள்கை விளக்கக் கூட்டங்களும் நடத்தத் தீர்மானங்களை ஒருமுகமாக நிறைவேற்றி, அப்பணியை வெற்றியுடன் முடிக்குமாறு மாவட்டச் செயலர் திரு. அ. தமிழன்பன் அவர்களுக்கு முழு அதிகாரம் கொடுத்தது.

செயற்குழுக் கூட்டத்திற்குத் தமிழாசிரியர் புலவர். திரு இராசகோபாலன் தலைமையேற்றார். குழு உறுப்பினர்கள் திருவாளர்கள் செயலர். அ. தமிழன்பன், இரா. பாண்டியன் (மாவட்டப்பொருளர்,) செ. இப்பாரரசு (தென்காசி வட்டச்செயலர்,) மு. பழநி. கலைச்செல்வன், இளமுருகு, சுப்பையா ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி இரவு 8 மணியளவில் நிறைவுற்றது.

உலக மக்கள் தொகை

(1981-ஆம் ஆண்டு 'டாசு' செய்தி)

0 மொத்த மக்கள்தொகை: 45 கோடி 80 இலக்கம்
0 இதில் ஏறத்தாழ பாதிப்பேர் (262 கோடி 50 இலக்கம்) ஆசியாக் கண்டத்தில் வாழ்கின்றனர்
0 அமெரிக்கக் கண்டங்களில் வசிப்பவர் 62 கோடி 30 இல்க்.
0 ஐரோப்பாக் கண்டத்தில் (சோவியத்து ஒன்றியம் நீங்கலாக) உள்ளவர்கள் 48 கோடி 50 இலக்.
0 ஆப்பிரிக்காவில் வாழ்பவர் 48 கோடி 40 இலக்.
0 மொத்த மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர்
0 65 அகவைக்கு மேற்பட்டவர்: தொகை 27 கோடி 8 இலக்.
0 அதிக மக்கள் தொகை உள்ள நாடுகள்: (வரிசையாக) 1) சீனா 2) இந்தியா 3) உருசியா 4) அமெரிக்கா 5) இந்தோனேசியா.

— ஐ நா. கணக்கீடு

தமிழின்றித் தமிழினமும் இல்லையன்றோ?

அன்புள்ளங்களின் ஆர்வ மடல்கள்!

உண்மை வெல்லும்!
உலகம் புரிந்து கொள்ளும்!

பேரன்பும், மதிப்பும் சான்ற பாவலரேறு அவர்களுக்கு,

பனிமலைப் பதியனின் பணிவன்பான வணக்கம். தங்களின் ஐரோப்பிய நாடுகள் சுற்றுச் செலவை வெற்றியாக முடித்துக் கொண்டு திரும்பிய பின் கலந்து கொண்ட முதல் நிகழ்ச்சியான ஈரோட்டு நிகழ்ச்சியில் கேட்ட பொழிவும் அதன்பின் தங்கும் விடுதியில் கண்டு உரையாடிய பொழுது வழங்கிய அருங் கருத்துகளும் அகம் மகிழும்படி செய்தன. நீண்ட நாள்கள் கழித்து வருகை புரிந்து, நேரில் கண்டு உரையாடும் வாய்ப்புக் கிடைத்தாலும் நெஞ்ச மெல்லாம் அஃது, ஏதோ ஒரு வகையில் நிறைவடையவே செய்கிறது. மறக்க முடிவதில்லை.

எனினும் இடையில் கற்றறிந்த ஒரு பேராசிரியப் (!) பேதையின் நிகழ்வு மனம் வருந்தும் படி செய்தது. அவ்வறிக்கையைக் கண்ணுற்ற நம் தென்மொழி அன்பர்கள் அப் பேராசிரியரின்(!) அறிவு ஏன் இவ்வளவு கீழாகப் போனது என்றும், அஃது இவருக்குப் பொருத்தமற்ற பணி என்றும் கூறிக் கடிந்து வருத்தமுற்றனர். இருப்பினும் தாங்கள் சொன்ன படி 'உண்மை வெல்லும்; உலகு புரிந்து கொள்ளும்' என்ற வகையில் இதனை இத்துடன விட்டு விடுகின்றேன்.

அன்பு நிறைந்த
பனிமலைப் பதியன், ஈரோடு-7

தங்களின் உயரிய தமிழ்த்தொண்டை
உலகம் நன்கறியும்!

மதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு,

வணக்கம் .... ஈழ விடுதலைத் தொடர்பாக அண்மையில் நிகழ்வுற்ற மூன்று மாநாடுகளின் அமைப்பாளர்களும் தங்களைப் புறக்கணித்தமை ஏன் என்று எனக்கு விளக்க வில்லை. அது குறிததுத் தாங்கள் வருந்தத் தேவையில்லை.

தங்களின் உயரிய தமிழ்த் தொண்டை உலகம் நன்கறியும். தமிழ் நிலமும் தென்மொழியும் துவளாது, சோராது உலா வரட்டும்! எந்நிலையிலும் மாறுத என் போன்ற தென்மொழி அன்பர்கள் ஒல்லும் வகையான் உறுதுணை புரிவர். தங்கட்குத் துயரத்தில் தோள் கொடுப்பர்.

தங்களின் தூய உணர்வை, எழுத்துத் திறனை, பாவன்மையை வெல்லுந்திறன் எவருக்கும் இல்லை. சென்று வந்த நாடுகளில் இருந்த சிறப்பினை - கண்ட காட்சிகளின் பேன்மையை விளக்கமாக எழுதிவர வேண்டுகின்றேன். அங்குள்ள தமிழர்களிடையே நிலவும் பண்பினை, இன, மொழி, உணர்வுப் பாங்கினைச் சுட்டிக் காட்டுங்கள். அஃது அனைவர்க்கும் பயன்படும். இவண் தங்கள் அன்புள்ள,

— கடவூர். மணிமாறன். திருச்சி:

தாங்கள் மதுரை மாநாட்டிற்கு வராதது
ஏன் என்று விளங்கவே இல்லை!

மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு!

வணக்கம் ....

தங்களை நேரில் காண மிகவும் விரும்புகின்றேன். நெடும் இடைவெளி இருந்து தடுக்கிறது தங்களைத் திசம்பர் 17, 18-ஆம் நாள்களில் மதுரையில் மிக எதிர்பார்த்தேன். தி.க. மாநாட்டிற்கில்லாவிட்டாலும், ஈழ விடுதலை மாநாட்டில் மிக மிக எதிர்பார்த்து ஏமாறினேன்: மேடை முழுக்க, ஊர்வலம் முழுக்க, பார்வையாளர்களிடம், மேடைகள் எல்லாம் தேடிக் கண்கள் சோர்வுற்றன. ஒன்றுக்கும் உதவாத ஏப்பை சாப்பைகள் கூட வந்திருந்தன; தங்களைக் காணவில்லை.

மாநாடு உணர்ச்சிப் பெருக்கோடு இருந்தது. வெறும் ஆரவாரமாக இருந்து விடாமல் பேசினபடி, உறுதியாக அங்குப் பேசிய தலைவர்கள் செயல்படுவார்களானால், மிக நலமாக அமையும். தாங்கள் வரத்தைப் பார்த்தால் இப்படி எத்தனை வீர உள்ளங்கள் - செயல் மறவர்கள் - தன்மான வீரர்கள் வரவில்லையோ, என எண்ணிக் காரணங்கள் தேடி, என் உள்ளம் அலை மோதுகிறது .... வந்திருந்த பேச்சாளர்களின் வீர உரை மிகக் கவர்ச்சியாக இருந்தது. செயல்பாடு எப்படி இருக்குமோ?

இந்த வாய்ப்பை நாம் நழுவ விட்டு விடுவோமானால், இனி நமக்கு விடிவே இல்லை. ஈழத்தமிழகம் பிறப்பதால் - பிறந்தால் என்ன நேர்ந்து விடுமோ என்று இந்தியப் பேராயக் கட்சியினரும் பிறரும் அஞ்சுவது போல் தெரிகிறது. எனவே ஈழத் தமிழ் நாடு தோன்ற முடியாத அளவுக்கு இன்னலும், இடுக்கணும், கரவும் சயமையும் சூழ்வார்களோ என்று அஞ்ச வேண்டியதாக இருக்கிறது. ஈழத் தமிழகம் தோன்றுமற் போனால் இந்தியத் தமிழ்நாடு தோன்றுவது எப்படி? கனிந்த பழமே கிடைக்காது என்றால், காய் பழமாகிக் கனிந்து, பிறகு உண்ணக் கிடைப்பது எப்போது? பேச்சுரைகள், - பேச்சுரைகள் என்றே நாள்களை நீட்டி பது பெரிய ஏமாற்று வேலையாக இருக்கும் என்றே எண்ணத் தோன்றுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாகத் தாங்கள் மாநாட்டிடிற்கு வராதது ஏன் என்று விளங்கவே இல்லை.

நிற்க. தமிழ் நிலம் சூடாக இருக்கிறது. இந்த நான்கு இதழ்களையும் நண்பர்கள் பாராட்டிப் படித்துக் காட்டினர். போற்றுகினறனர் .... தங்கள் தன்மானத் தொண்டு, விடுதலைப்பணி வீறுடன் தொடரட்டும் என வாழ்த்துகின்றேன். வணக்கம். தங்கள் பெரும் பணியில் சிறு துரும்பு ...

— தெ. சாலமோன்ராசு, விருதுநகர்.

'தமிழ் நிலம்' இதழ்கள் சிறப்புற
அமைந்துள்ளன!

பெருமதிப்புக்குரிய பேரன்புகெழுமிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம்.

'தமிழ் நிலம்' இதழ்கள் 25-26, 27, 28 கிடைக்கப் பெற்றேன். இதழ்கள் அனைத்துமே சிறப்புற அமைந் துள்ளன. தங்களின் ஆசிரிய உரைகளும், சுற்றுச் செலவு பற்றிய விளக்கக் கட்டுரையும், சுற்றுச் செலவு விளக்கப் பட்டியும் 'ஈழத் தமிழர் பற்றிய எழுச்சி உரைகளும், பெரியார் பற்றிய தங்களின் பேருரைகளும் பிறவும் சிறப்புற அமைந்துள்ளன. அவை தமிழர்க்குப் பெரும் பயன நல்குவன. மிக்க மகிழ்ச்சி.

— புலவர். பொதிகைச் செல்வன். — பவானி. 1.

நீங்களே கூறினாலும் நம்பமாட்டேன்!

அன்புள்ள ஐயா,

வணக்கம். தங்களைப் பற்றிப் பேராசிரியர் ஒருவர் மிகத் தாழ்வாகத் தூற்றி வருகிறார். அச்சடித்தும் பரப்புகிறார். அந்தத் தாளினைப் படித்தேன். என்னால் நம்ப முடியவில்லை. கிழித்துப் போட்டு விட்டேன். தங்களை அப் பேராசிரியர் நேரிலேயே கத்தியால் குத்தியிருந்தால் கூட அவ்வளவு கவலைப்பட மாட்டேன். ஆனால் அச்சடித்துப் பரப்புகிறார். இயக்கத்தை மூடக்க இஃதொரு வழியா?

ஐயா, தனித்தமிழும், நாடும் உயர, மற்ற நாட்டாரோடு நாமும் எல்லாத் துறையிலும், சரிநிகராக விளங்க, ஆவன செய்து கொண்டிருக்கும் தங்களைப் பற்றிக் கூறியதை நம்பவில்லை. நீங்களே கூறினாலும் நம்ப மாட்டேன். சூரியனிடம் ஒரு காங்கையா? தென்றலில் வெம்மையா? ஐயா, நான் நம்பவில்லை.

— சேலம் செம்மல், பட்டணம், இராசிபுரம் வட்.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பொருள் எனவே இத்தகைய இணைப்பாளர்களிடம் விடுதலை மறவர்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

விடுதலை இயக்கமாயினும் சரி, பிற முற்போக்கு இயக்கங்களாயினும் சரி ஒரு பிளவு எப்போதும் தீமை பயப்பதாகத் தான் இருக்க வேண்டுமென்பதில்லை. மக்களியக்கங்கள் உயிரியக்கங்களாகையால் அவற்றில் கழித்தலும் உட்செரித்தலும் நிகழும், நிகழவேண்டும். அஃது இல்லையாயின் அவ்வியக்கம் இறந்து போன ஓர் இயக்கமே. ஆனால் கழிவது காலங்-கடந்ததாகவும் உட்செரிக்கப்படுவது ஊட்டமுள்ளதாகவும் இருக்க வேண்டும். இந்நிகழ் முறையால் இரு நன்மைகள் ஏற்படுகின்றன. காலங் கடந்து போன கூறுகளின் கழிப்பு இயக்கத்திலுள்ள எதிராற்றல்களை வெளியேற்றி விடுகிறது; சாரமுள்ள புதியவற்றின் சேர்க்கை இயக்கத்தை மேலும் வளர்த்துச் செல்கிறது. அமிர்தலிங்கத்தின் குழு ஏற்கனவே உதிர்ந்து விட்ட ஒரு பகுதி. அதை மீண்டும் ஒட்டச் செய்யும் முயற்சி கைவிடப்படுவது மட்டுமன்று, அம் முயற்சியை மேற்கொள்வோர் கழிக்கப்படுவதும் இன்றியமையாதது. விடுதலைப் போருக்கு அணியமாகியும் அதற்கு ஆதரவாயும் இருக்கும் மக்களின் அனைத்துத் தரப்பினரையும் அப் போரில் ஈடுபடுத்துவது அதை விட இன்றியமையாதது.

ஒரு மக்களியக்கத்தின் வலிமை அதன் உறுப்பினர் எண்ணிக்கையில் அடங்கியிருக்கவில்லை. குறிக்கோளின் மீது அவ்வுறுப்பினர்களுக்கிருக்கும் உறுதியில், - அதை எய்தும் செயல் திட்டம் பற்றிய தெளிவில், - செயல் தந்திரங்கள் வகுக்கும் திறமையில், - விட்டுக்கொடுப்பின்றிப் போராடும் நிலை மாறுமையில் — விடுதலையில் தம் நலன்களைக் கொண்ட அனைத்து மக்களையும் போராட்டத்தில் இணைத்து வழி நடத்திச் செல்லும் தலைமைப் பண்பில்,- கழிக்க வேண்டியவற்றைக் கழித்துச் சேர்க்க வேண்டியவற்றைச் சேர்த்துச் செயற்படும் புறவய நோக்கில் - அடங்கியுள்ளது.

ஈழத்து மக்கள் உலகத்து ஒடுக்கப்பட்ட மக்கள் யாவரையும் விட இன்று விடுதலைக்கு எதையும் இழக்க அணியமாகி நிற்கின்றனர். அவர்களை வழி நடத்தி அதே வினைப்பாட்டின் போக்கில் அம் மக்களிடையில் நிலவும் சாதி, மத, பொருள்துறை வேறுபாடுகளை ஒழித்துப் புதிய குமுகாயம் படைக்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பு நம் ஈழப் போராளிகள் முன்னர்ஓர் அறைகூவலாக நிற்கிறது. 0

இந்திய மூளையின் விலை!

ஓரிடத்தில் மாந்த மூளைகள் விற்கப்பட்டன. அங்கே செருமனி நாட்டுக்காரனின் மூளைவைக்கப் பட்டிருந்தது. அந்த மூளையின் விலை இரண்டு உருபா என்றான் கடைக்காரன்.

அடுத்து வைத்திருந்த உருசிய நாட்டுக்காரனின் மூளையை 1-25 உருபா என்று கூறினான்.

அதற்கடுத்தாற் போல் இந்தியனின் மூளைவைக் கப்பட்டிருந்தது. அதன் விலையைக் கேட்ட பொழுது உருபா 125 என்றான்.

மூளை வாங்க வந்தவன் 'என்னையா, செருமனி, உருசியா மூளைகளை விடவா இந்திய நாட்டுக்காரனின் மூளை உயர்ந்தது? "என்று கேட்டான், கடைக்காரனை!

அதற்குக் கடைக்காரன் சட்டென்று, "அவர்களின் மூளைகளெல்லாம் இதுவரை பயன் படுத்தப் பட்டு விட்டன. அதனால் அதற்கு விலை குறைவு! ஆனால், இந்தியனின் மூளை இதுவரை பயன்படுத்தப் படவில்லையே! அதனால் அதன் விலை 125 உருபா' என்றான்!

—அந்தமான் தமிழர் சங்க வரவேற்பில்
ஔவை நடராசன் சொன்ன கதை!
—நன்றி- தீபரவட்டும்: 22-12-83

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/C)/657

அனுப்புதல்: பெறுநர். நூல்-அஞ்சல்
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5 திரு/திருவாட்டி

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.